©
தமிழ் நாடு அரசு
2017

[பதிவெண்.தநா/சிசிஎண்/467/2012–14
[பதிவெண்.197/2009
[விலை ரூ.9.60 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 279] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 30, 2017

ஆவணி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1 (அ)

**தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொது சட்ட விதிமுறைகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறை விதிகள், இன்னபிற.,**

---------

**அரசின் அறிவிக்கைகள்**

----------

**வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017–க்கு திருத்தம்

*[அ.ஆ. நிலை எண்.100, வணிகவரி மற்றும் பதிவு (ஆ–1)*
*2017 ஆகஸ்ட் 30, ஆவணி 14 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048]*

எண்.எஸ்ஆர்ஓ அ–40(அ)/2017,–தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 2017–ன் 19ல்) பிரிவு 164 ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் விதிகள் 2017–ஐ மேலும் திருத்த, இதன் மூலம், பின்தொடரும் விதிகள் தமிழ்நாடு ஆளுநரால் ஏற்படுத்தப்படுகிறது. அதாவது :–

(1) இந்த விதிகள் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மூன்றாவது திருத்தம்) விதிகள் 2017 என்றழைக்கப்படுகிறது.
(2) இருப்பினும் மற்றபடி உள்ளவாறு, மாநில அரசு அலுவல் சார்ந்த அரசிதழின் அறிவிக்கையில் குறிப்பிடப்படும் அந்த தேதி முதல் இந்த விதிகள் நடைமுறைக்கு வரும்.

2.தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் விதிகள், 2017 ( இதன் பிறகு இந்த அறிவிக்கையில் இது முதன்மை விதி என குறிப்பிடப்படும்)

(i) விதி 122 க்காக, 2017 ஜீன் 29 முதல் செயலுக்கு வருமாறு. பின்தொடரும் விதி மாற்றீடு செய்யப்படுவதாக கருதப்படவேண்டும், அதாவது :–

“122. **அதிகார குழுவினை அமைத்தல்.–** மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ன் விதி 122–ன் விதிமுறைகளுக்கு இணங்க அதிகார குழுவின் அமைத்தலானது, இருக்க வேண்டும்.”;

(ii) விதி 123 க்காக, 2017 ஜீன் 29 முதல் செயலுக்கு வருமாறு, பின்தொடரும் விதி மாற்றீடு செய்யப்படுவதாக கருதப்படவேண்டும், அதாவது :–

“123. **நிலைக்குழு மற்றும் தடுத்தல் (screening) குழுவினை அமைத்தல்.–** மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ன் விதி 123–ன் விதிமுறைகளுக்கு இணங்க நிலைக்குழு மற்றும் தடுத்தல் (screening) குழுவினை அமைத்தலானது இருக்க வேண்டும்.”;

(iii) விதி 124க்காக, 2017 ஜீன் 29 முதல் செயலுக்கு வருமாறு, பின்தொடரும் விதி மாற்றீடு செய்யப்படுவதாக கருதப்படவேண்டும், அதாவது :–

“124. **அதிகார அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நியமனம் சம்பளம் படிகள் மற்றும் இதர நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.–** மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ன் விதி 124–ன் விதிமுறைகளுக்கு இணங்க அதிகார அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நியமனம் சம்பளம் படிகள் மற்றும் இதர நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும்.”;

(iv) விதி 125க்காக, 2017 ஜீன் 29 முதல் செயலுக்கு வருமாறு, பின்தொடரும் விதி மாற்றீடு செய்யப்படுவதாக கருதப்படவேண்டும், அதாவது :–

“125. **அதிகார அமைப்பின் செயலாளர்;** மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ன் விதி 125–ன் விதிமுறைகளுக்கு இணங்க அதிகார அமைப்பின் செயலாளர் இருக்க வேண்டும்.”;

(v) விதி 126க்காக, 2017 ஜீன் 29 முதல் செயலுக்கு வருமாறு, பின்தொடரும் விதி மாற்றீடு செய்யப்படுவதாக கருதப்படவேண்டும், அதாவது :–

“126. **செய்முறை மற்றும் நடைமுறையை தீர்மானிக்கும் திறன்.–** மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ன் விதி 126–ன் விதிமுறைகளுக்கு இணங்க செய்முறை மற்றும் நடைமுறையை தீர்மானிக்கும் திறன் இருக்க வேண்டும்.”;

(vi) விதி 137 க்காக, 2017 ஜீன் 29 முதல் செயலுக்கு வருமாறு, பின்தொடரும் விதி மாற்றீடு செய்யப்படுவதாக கருதப்படவேண்டும், அதாவது :–

“137. **அதிகார அமைப்பின் பதவிக்காலம் .–** மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ன் விதி 126–ன் விதிமுறைகளுக்கு இணங்க அதிகார அமைப்பின் பதவிக்காலம் இருக்க வேண்டும்.”;

(vii) விதி 138க்காக, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது :–

“138. **சரக்குகளை இடம்பெயர்த்தல் தொடங்குவதற்கு முன் சமர்பிக்கவேண்டிய விவரங்கள் மற்றும் மின்னனு வழிப்பட்டியல் உருவாக்குதல்.–(1)** ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள சரக்குகளை இடம்பெயர்த்தலுக்கு காரணமாக இருக்கிற ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும்–

(அ) வழங்கல் தொடர்பாக; அல்லது

(ஆ) வழங்கல் தவிர மற்ற காரணங்களுக்காக; அல்லது

(இ) பதிவு பெறாத நபரிடமிருந்து உள்வழங்கல் விளைவாக.

கூறப்பட்ட சரக்குகளின் தொடர்புடைய விவரங்களை அத்தகைய இடம்பெயர்த்தல் தொடங்குவதற்கு முன்பே படிவம் ஜிஎஸ்டி EWB –01ல் பகுதி அ – ல் பொதுவலைவாயிலில் மின்னனு மூலமாக அளிக்க வேண்டும்.

(2) சரக்கு அனுப்புவராக அல்லது சரக்கு பெறுபவராக உள்ள வழங்கலை பெறும் ஒரு பதிவு பெற்ற நபர், அவரது சொந்த வாகனம் அல்லது வாடகைக்கு எடுத்த ஒன்று அல்லது இருப்புப் பாதை மூலம் அல்லது வானூர்தி மூலம் அல்லது கப்பலில் சரக்குகளை அனுப்பும் போது அந்த நபர் அல்லது பெறுநர் மின்னனு முறையில், படிவம் ஜிஎஸ்டி EWB –01 ன், பகுதி ஆ–ல் தகவல்களை பொது வலைவாயிலில் சமர்ப்பித்த பிறகு, படிவம் ஜிஎஸ்டி EWB –01 ல் மின்னனு வழிப்பட்டியலை உருவாக்க வேண்டும்.

(3) உப விதி (2) –ன் கீழ் மின்னனு வழிப்பட்டியலை உருவாக்கவில்லையெனில் மற்றும் சாலை மூலமாக சரக்கு போக்குவரத்திற்கு ஏற்றிச்செல்பவரிடம் சரக்குகளை ஒப்படைப்பு செய்யும் போது, பொது வலைவாயிலில் படிவம் ஜிஎஸ்டி EWB –01 ன் பகுதி (ஆ)–ல் ஏற்றிச்செல்பவர் தொடர்பான விவரங்களை அந்த பதிவு பெற்ற நபர் அளித்த விவரங்களின் அடிப்படையில் ஏற்றிச்செல்பவர் படிவம் ஜிஎஸ்டி EWB –01 ன் பகுதி அ–வினை கூறப்பட்ட பொது வலைவாயிலில் மின்னனு முறையில் மின்னனு வழிப்பட்டியலை உருவாக்கலாம்.

இருப்பினும் ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக அனுப்புச் சரக்கு ஒப்படைப் பொருளின் விலை மதிப்பு இருந்தாலும், பதிவு பெற்ற நபர் அல்லது, நேர்விற்கேற்ப, ஏற்றிச்செல்பவர், அவரது விருப்பத்தின்படி, மின்னனு வழிப்பட்டியலை உருவாக்கலாம்:

இருப்பினும் மேலும், ஒரு பதிவு பெறாத நபரால் ஏற்படுத்தப்படும் இடம்பெயர்த்தலில், அவரின் சொந்த வாகனத்திலோ அல்லது வாடகை எடுத்த ஒன்றிலோ அல்லது ஏற்றிச்செல்பவர் மூலமோ, அவரால் அல்லது அந்த ஏற்றிசெல்பவரால், தங்கள் விருப்பத்தின்படி, இந்த விதியில் குறிப்பிட்டுள்ள முறையில் பொது வலைவாயிலில் படிவம் ஜிஎஸ்டி EWB –01 ல் மின்னனு வழிப்பட்டியலை உருவாக்கலாம்:

இருப்பினும் மேலும் அது, சரக்கு அனுப்புவரின் வியாபார இடத்திலிருந்து சரக்கு பெறுபவரின் வியாபார இடம் வரை, மேலும் போக்குவரத்திற்காக, மாநிலத்திற்குள் அல்லது ஒருங்கிணைந்த ஆட்சிபகுதியில், பத்து கிலோமீட்டருக்கு குறைவான தூரத்திற்கு சரக்கு போக்குவரத்து அமைந்தால், வழங்குபவர் அல்லது ஏற்றிச்செல்பவர் படிவம் ஜிஎஸ்டி EWB –01 ன் பகுதி ஆ–வில் கொண்டு செல்லும் வாகனத்தின் விவரங்களைஅளிக்க தேவையில்லை.

விளக்கம் –1 – இந்த உப விதியின் நோக்கங்களுக்காக, ஒரு பதிவு பெறாத வழங்குபவரிடமிருந்து சரக்குகள் பதிவு பெற்ற பெறுபவருக்கு வழங்கும் போது, சரக்குகளின் இடம்பெயர்த்தல் தொடங்குவது பெறுபவருக்கு தெரியுமெனில், அந்த பெறுநரே அந்த இடம்பெயர்த்தலுக்கு காரணமாக கூறப்பட வேண்டும்.

விளக்கம்–2 – இருப்புப் பாதை மூலமாக அல்லது வானூர்தி மூலமாக அல்லது கப்பலின் மூலமான சரக்குகள் போக்குவரத்தில், படிவம் ஜிஎஸ்டி EWB –01 ன், பகுதி அ–வில் விவரங்களை சரக்கு அனுப்புபவர் அல்லது வழங்கலின் பெறுபவராக உள்ள சரக்கு பெறுபவர் அளிக்க வேண்டும்.

(4) பொது வலைவாயிலில் மின்னனு வழிப்பட்டியலை தோற்றுவித்த பிறகு, பொது வலைவாயிலில் ஏற்றிச்செல்பவர், பெறுபவர் மற்றும் வழங்குபவருக்கு, ஒரு தனித்தன்மையான மின்னனு வழிப்பட்டியல் எண் (EBN) கிடைக்கக் கூடியதாய் இருக்கும்.

(5) எந்த ஏற்றிச்செல்பவரும் சரக்கு போக்குவரத்தின் போது ஒரு வாகனத்திலிருந்து சரக்குகளை மற்றொன்றிற்கு இடமாற்றும் போது, அந்த இடமாற்றத்திற்கு முன் மற்றும் சரக்குகளின் மேலும் இடம்பெயர்த்தலுக்கு, பொது வலைவாயிலில் மின்னனு வழிப்பட்டியலை படிவம் GST EWB –01 ல் சரக்கு வாகனத்தின் விவரங்களை புதுப்பிக்க வேண்டும்,

இருப்பினும், ஏற்றிச்செல்பவரின் வியாபார இடத்திலிருந்து இறுதியாக சரக்கு பெறுபவரின் வியாபார இடத்திற்கு, அந்த மாநிலத்திற்குள் அல்லது ஒருங்கிணைந்த ஆட்சி பகுதியில் பத்து கிலோ மீட்டர்களுக்கு குறைவான தூரத்தை கொண்ட சரக்கு போக்குவரத்தாக இருந்தால், மின்னனு வழிப்பட்டியலில் வாகனத்தின் விவரங்களை புதுப்பிக்க தேவையில்லை.

(6) உப விதி (1) –ன் விதிமுறைகளுக்கு இணங்கி மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கியபின், போக்குவரத்திற்கு ஒரே சரக்கு வாகனத்தில் பலவித அனுப்பு சரக்குகளை ஏற்ற விரும்பினால், ஏற்றிச்செல்பவர், மின்னனு முறையில் பொது வலைவாயிலில் உருவாக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு சரக்குகளுக்கான மின்னனு வழிப்பட்டியல்களின் வரிசை எண்ணினை குறித்து மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியலை கூறப்பட்ட வலைவாயிலில் சரக்குகள் இடம்பெயர்த்தலுக்கு முன் படிவம் ஜிஎஸ்டி EWB –02 அவரால் உருவாக்கலாம்.

(7) உப விதி (1) ன் விதிமுறைகளுக்கு இணங்கி படிவம் ஜிஎஸ்டி EWB –01 ஐ சரக்கு பெறுபவர் அல்லது சரக்கு அனுப்புபவர் உருவாக்காத போது மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் அனுப்புச் சரக்கு ஒப்படைப் பொருளின் விலை மதிப்பு இருந்தால், அந்த நேர்விற்கு ஏற்ப ஏற்றிசெல்பவர், ஒப்படை செலுத்துசீட்டு அல்லது வழங்கல் சீட்டு அல்லது விலைப்பட்டியல் அடிப்படையில் படிவம் ஜிஎஸ்டி EWB –01 ஐ உருவாக்க வேண்டும் மற்றும் சரக்கு மேலும் இடம்பெயர்த்தலுக்கு முன் பொது வலைவாயிலில் ஒருங்கிணைக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியலை படிவம் ஜிஎஸ்டி EWB –02 ல் உருவாக்கலாம்.

(8) படிவம் ஜிஎஸ்டி EWB –01 ன் பகுதி (அ) ல் அளிக்கப்பட்ட விவரங்கள் பொதுவலைவாயிலில் பதிவுப்பெற்ற பெறுபவருக்கு கிடைக்கக்கூடியதாய் இருக்கும் அதனை படிவம் GSTR –1 ல் அளிக்க வேண்டிய விவரங்களுக்கு பயன்படுத்தலாம்.

இருப்பினும் படிவம் ஜிஎஸ்டி EWB –01 ல் பதிவு பெறாத வழங்குனரால் தகவல்கள் அளிக்கப்பட்டிருந்தால், கைப்பேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி கிடைக்கும் என்றால், மின்னனு முறையில் அவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

(9) இந்த விதியின் கீழ் மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கப்பட்டு, ஆனால் ஒன்று சரக்குகள் செல்லவில்லை அல்லது மின்னனு வழிப்பட்டியலில் அளித்த விவரங்கள்படி செல்லவில்லை என்றால், பொது வலைவாயில் மூலம் நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட வசதி மையம் மூலமாகவோ, மின்னனு வழிப்பட்டியலை 24 மணி நேரத்திற்குள் மின்னனு முறையில் நீக்கம் செய்யலாம்,

இருப்பினும் விதி 138 ஆ–வின் விதிமுறைகளுக்கு இணங்கி கடந்து செல்கையில் சரிபார்த்திருந்தால் அந்த மின்னனு வழிப்பட்டியலை நீக்க முடியாது.

(10) நிரல் (2) –ல் குறிப்பிட்டவாறு சரக்குகள் போக்குவரத்தின் தூரத்திற்காகவும், கீழ்கண்ட அட்டவணையின் நிரல் (3) ல் குறிக்கப்பட்டவாறு தொடர்புடைய தேதி முதல் இந்த விதிகளின் கீழ் உருவாக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியல் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியல் செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.

அட்டவணை

| வ.எண் | தொலைதூரம் | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | 100 கிலோ மீட்டர் வரை | ஒரு நாள் |
| 2. | ஒவ்வொரு 100 கிலோ மீட்டர் அல்லது அதன் பிறகு அவ்விடத்திலிருந்து பகுதி. | ஒரு கூடுதல் நாள் |

இருப்பினும் ஆணையர், அறிவிக்கை மூலம், அதில் குறிப்பிடப்படும் சில வகையினங்களுக்கு மின்னனு வழிப்பட்டியலின் செல்லுபடியாகும் காலத்தை நீட்டிக்க கூடும்.

இருப்பினும் கூடுதலாக, விதிவிலக்கான இயற்கை சூழலின் கீழ் மின்னனு வழிப்பட்டியலை செல்லுபடியாகும் காலத்திற்குள் சரக்குகளை கொண்டு செல்ல முடியாத போது, படிவம் ஜிஎஸ்டி EWB–01 ன், பகுதி ஆ–ல் விவரங்களை புதுப்பித்தப் பிறகு ஏற்றிசெல்பவர் வேறொரு மின்னனு வழிப்பட்டியலை உருவாக்கலாம்.

விளக்கம் – இந்த விதிகளின் நோக்கங்களுக்காக, “தொடர்புடைய தேதி” என்பது மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கிய தேதியாகும் மற்றும் செல்லுபடியாகும் காலத்தை மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கப்பட்ட நேரத்திலிருந்து கணக்கிட வேண்டும் மற்றும் ஒவ்வொரு நாளும் இருபத்தி நான்கு மணிநேரங்களாக கணக்கிடப்பட வேண்டும்.

(11) உப விதி (1) –ன் கீழ் உருவாக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியல் விவரங்கள், பெறுபநருக்கு, பதிவு பெற்றிருந்தால், பொது வலைவாயிலில், அவர் மின்னனு வழிப்பட்டியல் உள்ளடக்கிய அனுப்பு சரக்கு ஒப்படைப் பொருளை ஏற்பு அல்லது நிராகரிப்பு தெரிவித்திருந்தால் கிடைக்க பெற வேண்டும்.

(12) உப விதி (11) –ல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபவர், அவரது ஏற்பு அல்லது நிராகரிப்பை பொது வலைவாயில் மூலம் அவருக்கு விபரங்கள் கிடைக்கப்பெற்ற எழுபத்தி இரண்டு மணிநேரங்களுக்குள் தெரிவிக்காவிட்டால், அந்த விவரங்களை அவர் ஏற்றுக்கொண்டதாக கருதப்பட வேண்டும்.

(13) வேறு எந்த மாநிலத்தின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் அல்லது மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளின்படி விதி 138 –ன் கீழ் உருவாக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியல் இந்த மாநிலத்திலும் செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.

(14) இந்த விதியின் உள்ளடக்கம் எவ்வாறு இருந்தாலும், மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கத் தேவையில்லாதவை–

(அ) இணைப்பில் குறிப்பிட்டுள்ள சரக்குகளை ஏற்றிச் செல்லும் போது;

(ஆ) விசைப்பொறி இல்லா வாகனத்தில் சரக்குகளை ஏற்றிச் செல்லும் போது;

(இ) சுங்க தடை நீக்கத்திற்காக துறைமுகம், விமானநிலையம், வான் சரக்கு நிலையத்திலிருந்து மேலும் நில சுங்க நிலையத்திலிருந்து உள்நாட்டு சரக்கு பெட்டக முனையம் அல்லது சரக்கு பெட்டக நிலைத்திற்கோ ஒரு சரக்கினை கொண்டு செல்லும்போது; மற்றும்

(ஈ)அத்தகைய சரக்குகளின் இடம்பெயர்த்தலை பொறுத்து மற்றும் மாநிலத்திற்குள் உள்ள அத்தகைய பகுதிக்குள் மற்றும் அத்தகைய தொகைக்கு மிகாத விலை மதிப்பை மாநில வரியின் ஆணையர், மத்திய வரி சரக்குகளின் முதன்மை ஆணையரை கலந்து ஆலோசித்த பிறகு அறிவிக்கலாம்.

விளக்கம் – குறுந்தகவல் (SMS) மூலமாகவும் மின்னனு வழிப்பட்டியலினை உருவாக்க அல்லது நீக்க வசதிகளும் கிடைக்கப் பெறுமாறு செய்யப்படலாம்.

**இணைப்பு**
**(விதி 138 (14) பார்க்க)**

| **வ. எண்** | **அத்தியாயம் அல்லது தலைப்பு அல்லது உபதலைப்பு அல்லது கட்டண வீதப்பட்டியல் இனம்** | **பொருட்களின் விவரிப்பு** |
|---|---|---|
| **(1)** | **(2)** | **(3)** |
| 1. | 0101 | உயிருள்ள கழுதைகள், ஆண் கோவேறு கழுதைகள் மற்றும் பெண் கோவேறு கழுதைகள் |
| 2. | 0102 | உயிருள்ள கால்நடை விலங்குகள் |
| 3. | 0103 | உயிருள்ள பன்றிகள் |
| 4. | 0104 | உயிருள்ள வெள்ளாடுகள் மற்றும் ஆடுகள் |
| 5. | 0105 | காலஸ் டொமஸ்டிக்கஸ் இனங்களின் பறவைகள், வாத்துகள், காட்டு வாத்துகள், வான் கோழிகள் மற்றும் கினி கோழி ஆகிய கூறப்படும் உயிருள்ள வளர்ப்பு பறவைகள் |
| 6. | 0106 | பாலூட்டிகள், பறவைகள், பூச்சிகள் போன்ற மற்ற உயிர் விலங்குகள். |
| 7. | 0201 | புதிய மற்றும் குளிரூட்டப்பட்ட கால்நடை விலங்குகளின் இறைச்சி. |
| 8. | 0202 | உறையவைக்கப்பட்ட கால்நடை விலங்குகளின் இறைச்சி (உறையவைக்கப்பட்டு மற்றும் தனி கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 9. | 0203 | குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட புதிய பன்றியின் இறைச்சி (உறையவைக்கப்பட்டு மற்றும் அலகு கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 10. | 0204 | குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட புதிய செம்மறி ஆடு அல்லது வெள்ளாட்டின் இறைச்சி (உறையவைக்கப்பட்டு மற்றும் அலகு கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 11. | 0205 | புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட பெண் கோவேறு கழுதைகள், ஆண் கோவேறு கழுதைகள், கழுதைகள் அல்லது குதிரைகளின் இறைச்சி (உறையவைக்கப்பட்டு மற்றும் அலகு கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |

| | | |
|---|---|---|
| 12. | 0206 | புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட ஆண், பெண் கோவேறு கழுதைகள், கழுதைகள், குதிரைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் அல்லது கால்நடைகளின் உண்ணத்தக்க பயனற்ற உறுப்புகள் (உறையவைக்கப்பட்டு மற்றும் அலகு கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 13. | 0207 | புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட, 0105 தலைப்பிலுள்ள வளர்ப்பு பறவைகளின் உண்ணத்தக்க பயனற்ற உறுப்புகள் மற்றும் இறைச்சி (உறையவைக்கப்பட்டு மற்றும் அலகு கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 14. | 0208 | புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட, உண்ணத்தக்க பயனற்ற உறுப்புகள் மற்றும் மற்ற இறைச்சி (உறையவைக்கப்பட்டு மற்றும் அலகு கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 15. | 0209 | புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட, பன்றி கொழுப்பு, மெலிதில்லாத இறைச்சி மற்றும் வளர்ப்பு பறவைகள் கொழுப்பு, அளிக்கப்படாத அல்லது வேறுவகையின் சத்து (உறையவைக்கப்பட்டு மற்றும் அலகு கொள்கலனில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 16. | 0209 | உப்பிடப்பட்ட, உவர்நீரிட்ட, உலர்த்தப்பட்ட அல்லது புகையிடப்பட்ட பன்றி கொழுப்பு, மெலிதில்லாத இறைச்சி மற்றும் வளர்ப்பு பறவைகள் கொழுப்பு, அளிக்கப்படாத அல்லது வேறுவகையின் சத்து (அலகு கொள்கலன்களில் வைக்கப்பட்டவைகள் தவிர) |
| 17. | 0210 | இறைச்சி மற்றும் உண்ணத்தக்க பயனற்ற உறுப்புகள், உப்பிடப்பட்ட, உவர்நீரிட்ட, உலர்த்தப்பட்ட அல்லது புகையிடப்பட்டது; உண்ணத்தக்க மாவுகள் மற்றும் இறைச்சி உணவு அல்லது பயனற்ற உறுப்பு இறைச்சி, தனி கொள்கலன்களில் வைக்கப்பட்டவைகள் தவிர. |
| 18. | 3 | பதப்படுத்தப்பட்டோ அல்லது பதப்படுத்தப்படாமலோ, திருத்தப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட நிலையில் மீன்விதைகள், இறால் /கூனிஇறால் விதைகள் [2.5% ஈர்க்கும் மற்றும் அத்தியாயம் 3–ன் கீழ் உள்ள சரக்குகளை தவிர] |
| 19. | 0301 | உயிருள்ள மீன் |
| 20. | 0302 | மீன் இறைச்சி சுருனை மற்றும் 0304 தலைப்பிலுள்ள மற்ற மீன் இறைச்சி தவிர, புதிய அல்லது குளிரூட்டப்பட்ட மீன். |
| 21. | 0304 | புதிய அல்லது குளிரூட்டப்பட்ட மீனிறைச்சி சுருனை மற்றும் மற்ற மீன் இறைச்சி (துண்டாக்கப்பட்டதோ அல்லது துண்டாக்கப்படாததோ). |
| 22. | 0306 | உயிருள்ள, புதிய அல்லது குளிரூட்டப்பட்ட ஓட்டு மீன்கள், ஓடுடனோ அல்லது ஓடு இல்லாமலோ; உயிருள்ள, புதிய அல்லது குளிரூட்டப்பட்ட ஓட்டு மீன்கள், ஓட்டுடன், நீரில் கொதிக்க வைத்து அல்லது நீராவியில் சமைத்தது. |
| 23. | 0307 | உயிருள்ள, புதிய அல்லது குளிரூட்டப்பட்ட மெல்லுடலிகள், ஓடுடனோ அல்லது ஓடு இல்லாமலோ; ஓட்டு மீன்கள் மற்றும் மெல்லுடலிகள் தவிர உயிருள்ள, புதிய அல்லது குளிரூட்டப்பட்ட முதுகெலும்பற்ற நீர்வாழ்வன. |
| 24. | 0308 | ஓட்டு மீன்கள் மற்றும் மெல்லுடலிகள் தவிர உயிருள்ள, புதிய அல்லது குளிரூட்டப்பட்ட முதுகெலும்பற்ற நீர்வாழ்வன. |
| 25. | 0401 | செறிவூட்டப்படாத, சர்க்கரை சேர்க்கப்படாத அல்லது மற்ற இனிப்பூட்டும் பொருள் இல்லாத, புதிய பால் மற்றும் பதப்படுத்தப்பட்ட பால், பிரிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | பால் உள்ளிட்ட, பால் மற்றும் கிரீம், கடும் உயர் வெப்பநிலை (UHT) பால் தவிர. |
| 26. | 0403 | தயிர், இனிப்பு தயிர், மோர் |
| 27. | 0406 | அலகு கொள்கலனில் வைத்து மற்றும் பதிவுபெற்ற வணிக சின்னப் பெயர் தாங்கியுள்ளவைகள் தவிர, பனீர் அல்லது கொண்டை கடலை. |
| 28. | 0407 | புதிய, பதப்படுத்தப்பட்ட அல்லது சமைத்த பறவைகளின் முட்டைகள், ஓட்டுடன். |
| 29. | 0409 | அலகு கொள்கலனில் வைத்து மற்றும் பதிவுபெற்ற வணிக சின்னப் பெயர் தாங்கியுள்ளவைகள் தவிர, இயற்கை தேன் |
| 30. | 0501 | மனித முடி, வேலைபாடு செய்யாத, சலவை செய்து பளபளப்பு செய்யப்பட்டதோ அல்லது சலவை செய்யாது பளபளப்பு செய்யப்படாததோ; மனித முடி கழிவு. |
| 31. | 0506 | அனைத்து சரக்குகள் அதாவது எலும்புகள் மற்றும் கொம்புகள், வேலைப்பாடு செய்யாத, கொழுப்பு நீக்கிய, எளிமையாக தயார் செய்த (ஆனால் வடிவமாக வெட்டாத) அமிலத்தில் கையாண்டு அல்லது ஜெலாட்டினில் கையாண்டது; பொடிகள் மற்றும் உபயோக மற்ற இதன் விளைப்பொருட்கள். |
| 32. | 0507 90 | அனைத்து சரக்குகள் அதாவது குளம்பு துாள், கொம்பு துாள், குளம்புகள், வளை நகங்கள், நகங்கள் மற்றும் அலகுகள்; மான்கொம்புகள்; முதலியன, |
| 33. | 0511 | விந்து மற்றும் பதப்படுத்தப்பட்ட விந்து (semen) |
| 34. | 6 | உயிருள்ள மரங்கள் மற்றும் மற்ற செடிகள்; கிழங்குகள், வேர்கள் மற்றும் அவற்றை போன்றவை : கொய்யப்பட்ட பூக்கள் மற்றும் அலங்கார பூங்கொத்து |
| 35. | 0701 | புதிய அல்லது குளிரூட்டப்பட்ட உருளைக்கிழங்கு |
| 36. | 0702 | புதிய அல்லது குளிரூட்டப்பட்ட தக்காளிகள் |
| 37. | 0703 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய வெங்காயம், வெங்காய பூண்டு, பூண்டு, வெங்காய இனப்பூண்டு மற்றும் மற்ற வெள்ளை பூண்டு காய்கறிகள் |
| 38. | 0704 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய முட்டைகோஸ் காலிப்பிளவர், முட்டைகோஸ் வகை (kohl rabi), கோசுகீரை (kale), மற்றும் அவற்றை போன்ற உண்ணக்கூடிய ஃபிராசிகாஸ். |
| 39. | 0705 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய கீரை (லாக்குவா சட்டை வா) மற்றும் சிக்கரி (சிக்கோரியம் எஸ்பிபி (SPP)), |
| 40. | 0706 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய கேரட், டர்னிப், பீட்ரூட், சாலட், சகைப்பற்று வேர்செடி (Salsify), கிழங்கு கீரை, முள்ளங்கி மற்றும் உண்ணக் கூடிய வேர் இனங்கள் |
| 41. | 0707 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய வெள்ளரி மற்றும் சிறு வெள்ளரி |
| 42. | 0708 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய லெகுமினஸ் காய்கறிகள், ஓட்டுடன் அல்லது ஓடில்லாமல் |
| 43. | 0709 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய மற்ற காய்கறிகள் |
| 44. | 0712 | உலர் காய்கறிகள், முழுமையாக, வெட்டிய, துண்டாக, உடைந்த அல்லது பொடியாக ஆனால் மேலும் தயாராக தேவையில்லாத ஓட்டுடன், தோல் அல்லது தோல் இல்லாத அல்லது பிரித்த |
| 45. | 0713 | ஓட்டுடன், தோல் அல்லது தோல் இல்லாத அல்லது பிரித்த உலர்ந்த லெகுமினஸ் காய்கறிகள் |

| | | |
|---|---|---|
| 46. | 0714 | குளிரூட்டபப்பட்ட அல்லது புதிய கிழங்கு செடி, கூவை கிழங்கு, சாலாப், ஜெருசலம் ஆர்டிசோக்ஸ், இனிப்பு உருளை கிழங்கு மற்றும் ஒத்த வேர்கள் மற்றும் அதிக ஸ்டார்ச்சுடன் கிழங்கு இன்சலின் அடங்கியது; ஜவ்வரிசி கரு |
| 47. | 0801 | புதியது அல்லது உலர்ந்தது, ஓடுடன் அல்லது இல்லாமல் அல்லது தோல் உரித்த தேங்காய் |
| 48. | 0801 | புதியது அல்லது உலர்ந்தது, ஓடுடன் அல்லது இல்லாமல் அல்லது தோல் உரித்த பிரேஸில் கொட்டைகள் |
| 49. | 0802 | புதியது, ஓடுடன் அல்லது இல்லாமல் அல்லது தோல் உரித்த மற்ற கொட்டைகள், பாதாம் போன்ற புதியது, ஹாசல் கொட்டைகள் அல்லது ஃபில்பெர்டுகள் (கோரியஸ் எஸ்பிபி (SPP)), வாதுமைக் கொட்டைகள், செஸ்நட் (காஸ்டனியா எஸ்பிபி), பிஸ்தாசியோஸ், மெகடாமிய கொட்டைகள், கோலா கொட்டைகள் (கோலா எஸ்பிபி ), பாக்கு கொட்டைகள். |
| 50. | 0803 | புதியது அல்லது உலர்ந்த வாழை உள்ளடங்கிய வாழைபழம் |
| 51. | 0804 | புதிய பேரிட்சை பழம், அத்திப்பழம், பைனாப்பிள், அவகோடா, கொய்யா, மாம்பழம் மற்றும் மங்கோஸ்டான்கள் |
| 52. | 0805 | புதிய ஆரஞ்சு போன்ற சிட்ரஸ் பழங்கள், மேன்டரின்கள் (சாட்ஸ்சுமஸ் மற்றும் டேன் ஜிரியன்கள் அடங்கியது); கிளமென்டின், வில்கிங் மற்றும் அதேபோன்ற உயர்வகை சிட்ரஸ், போமிலோ அங்கிய திராட்சை பழம், எலுமிச்சை (சிட்ரஸ் லைமோன், சிட்ரஸ் லைமோனோம்) மற்றும் லைமஸ் (சிட்ரஸ் ஆரான்டிஃபோலியா, சிட்ரஸ் லாட்டிஃபோலியா. |
| 53. | 0806 | புதிய திராட்சைகள் |
| 54. | 0807 | புதிய தர்பூசணி அடங்கிய மூலாம்பழம் மற்றும் பாபாவ் (பப்பயாஸ்) |
| 55. | 0808 | புதிய ஆப்பிள், பேரிக்காய் மற்றும் நாட்டு மாதுளைபழம். |
| 56. | 0809 | புதிய சீமை வாதுமைபழம், செர்ரிகள், பீச்சஸ் (நெக்டாரின் உள்ளடங்கிய) சதை மற்றும் கற்றாழை |
| 57. | 0810 | புதிய ஸ்ட்ராபெரி, ராஸ்பெர்ரி, பிளாக்பெர்ரி, மல்பெரி மற்றும் லோகன் பெர்ரி கருப்பு, வெள்ளை அல்லது சிகப்பு கரண்ட் அல்லது கூஸ்பெர்ரி, கிரான் பெர்ரி, பில்பெர்ரி போன்ற மற்ற பழங்கள் மற்றும் மற்ற ஜீனஸ் வேசினப் பழங்கள், கிவி பழம், டுரைன், பெர்சிமோன், மாதுளை பழம், புளி, சப்போட்டா (சிகோ), சீதாபழம் (சுபா), போர் லிச்சி. |
| 58. | 0814 | புதிய சிட்ரஸ் பழங்களின் தோல் அல்லது முலாம் பழம் (தர்பூசணி உள்ளடக்கிய) |
| 59. | 9 | விதை தன்மையின் அனைத் து சரக்குகள் |
| 60. | 0901 | வறுக்கப்படாத காஃபி பீன்ஸ் |
| 61. | 0902 | தேநீரின் பதப்படுத்தப்படாத பச்சை இலைகள் |
| 62. | 0903 | சோம்பின் விதைகள், பாடியான், பெருஞ்சீரகம், கொத்தமல்லி, சீரகம் அல்லது கேரவே; ஜீனிபர் பெர்ரிஸ் (விதை தன்மையுள்ள) |
| 63. | 0910 11 10 | பதப்படுத்தப்பட்ட வடிவம் தவிர, புதிய இஞ்சி |
| 64. | 0910 30 10 | பதப்படுத்தப்பட்ட வடிவம் தவிர, புதிய மஞ்சள் |
| 65. | 1001 | கோதுமை மற்றும் மெஸ்லின் கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 66. | 1002 | கம்பு கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |

| | | |
|---|---|---|
| 67. | 1003 | வார்கோதுமை கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 68. | 1004 | ஓட்ஸ் கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 69. | 1005 | சோளம் (Maiza) மக்காச்சோளம் கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 70. | 1006 | அரிசி கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 71. | 1007 | சோளம் (Sorghum) தானியம் கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 72. | 1008 | கருப்பு கோதுமை, தினை மற்றும கேனரி விதைகள்: சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற மற்ற தானியங்கள் கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 73. | 1101 | கோதுமை அல்லது மெஸ்லின் மாவு கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 74. | 1102 | கோதுமை அல்லது மெஸ்லின் தவிர தானிய மாவுகள், (சோளம்) (மக்காசோளம்) மாவு, கம்பு மாவு, போன்றவை) கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 75. | 1103 | உமி நீக்கப்பட்ட தானியங்கள், மாவு மற்றும் சிறு உருண்டைகள் கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 76. | 1104 | உமி நீங்கிய தானிய கூலம் |
| 77. | 1105 | உருளைக்கிழங்கின் மாவு கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 78. | 1106 | 0713ன் தலைப்பின் உலர்ந்த லெகுமினஸ் காய்கறிகள் (பயறுவகைகள்) (கோர் மாவு 1106 10 10 தவிர மற்றும் கோர் கம் சுத்திகரிக்கப்பட்டு பிளந்தது 1106 10 90) தலைப்பு 0714–ன் தண்டுகள் அல்லது வேர்களின் அல்லது சவ்வரிசி அல்லது அத்தியாயம் 8–ன் விளைபொருட்கள் அதாவது புளியின், சிங்கோடாவின், மாம்பழ மாவு இன்னபிற கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர |
| 79. | 12 | விதை தன்மையின் அனைத்து சரக்குகள் |
| 80. | 1201 | விதை தன்மையுடைய, உடைத்த அல்லது உடைக்காத சோயா பீன்ஸ் |
| 81. | 1202 | விதை தன்மையுடைய, ஓட்டுடன் அல்லது ஓடில்லாமல் அல்லது உடைத்த வருக்காத அல்லது வேறுவகையில் சமைத்த நிலக்கடலை |
| 82. | 1204 | விதை தன்மையுடைய, உடைத்த அல்லது உடைக்காத ஆளிவிதை |
| 83. | 1205 | விதை தன்மையுடைய, உடைத்த அல்லது உடைக்காத ரேப் அல்லது கோல்கள் விதைகள் |
| 84. | 1206 | விதை தன்மையுடைய, உடைத்த அல்லது உடைக்காத சூரியகாந்தி விதைகள் |
| 85. | 1207 | விதை தன்மையுடைய, உடைத்த அல்லது உடைக்காத இதர எண்ணெய் விதைகள் அல்லது ஒரிஜினோஸ் பழங்கள் (அதாவது பனை கொட்டைகள் மற்றும் பருப்புகள், பருத்தி விதைகள், விளக்கெண்ணெய் விரைகள், எள் விதைகள், கடுகு விதைகள், குங்குமப்பூ (கார்த்தாமுஸ்டின்கிடோரியஸ்) |

| | | |
|---|---|---|
| | | விதைகள், முலாம்பழ விதைகள், பாப்பி விதைகள், அஜாம்ஸ், மாம்பழ பருப்பு, நைகர் விதைகள், கோகம்) |
| 86. | 1209 | விதைத்தலுக்காக பயன்படும் விரையின், பழங்கள் மற்றும் வித்துக்கள், விதைகள். |
| 87. | 1210 | புதிய ஹாப் கூம்புகள் |
| 88. | 1211 | புதிய அல்லது குளிரூட்டப்பட்ட, வாசனை திரவமாக பயன்படும் வகையிலான, மருத்துவத்துறையில் அல்லது பூச்சிக்கொல்லி, பூஞ்சை கொல்லி அல்லது இதே போன்ற நோக்கத்திற்கான, தாவரங்கள் அல்லது தாவரங்களின் பகுதிகள். |
| 89. | 1212 | புதிய அல்லது குளிரூட்டப்பட்ட லோகுஸ்ட் பீன்ஸ், கடற்பாசி மற்றும் இதர பாசி, அடித்த சக்கை மற்றும் கரும்பு |
| 90 | 1213 | தயார் செய்யப்படாத, வெட்டிய அல்லாத வெட்டாமல், கசடாக அழுத்தி அல்லது சிறு உருண்டை வடிவமான தானிய வைக்கோல் அல்லது உமி |
| 91. | 1214 | சிறு உருண்டை வடிவத்திலோ அல்லது இல்லாமலோ, ஸ்வேடஸ், மேன்கோல்ட்ஸ், வேர் தவீணம், வைக்கோல், குதிரை மசால் (அல்ஃபால்ஃபா), கிளோவர், செயின்ஃபோயின், ஃபோராஜ்காலே, லுபினஸ், வெட்சாஸ் மற்றும் ஒத்த தீவன விளைபொருட்கள். |
| 92. | 1301 | அரக்கு மற்றும் தட்டரக்கு |
| 93. | 1404 90 40 | வெற்றிலை இலைகள் |
| 94. | 1701 (அ) 1702 | கரும்பு வெல்லம்(கர்) மற்றும் பனை வெல்லம் உள்ளடங்கிய அனைத்து வகையின் வெல்லம். |
| 95. | 1904 | பொங்கிய அரிசி, மூரி என்று பொதுவாக அறியப்படுவது, தட்டையான அல்லது அடிக்கப்பட்ட அரிசி, சைரா என்று பொதுவாக அறியப்படுவது, வறுத்த அரிசி, கோய் என பொதுவாக அறியப்படுவது, சர்க்கரை அல்லது கர் உடன் தோய்த்த வறுத்த நெல் அல்லது அரிசி, முர்கி என பொதுவாக அறியப்படுவது. |
| 96. | 1905 | அப்பளம் |
| 97. | 1905 | ரொட்டி (Bread) (முத்திரையுடன் அல்லது வேறுவகையில்), பீட்சா ரொட்டி (Bread) விதிவிலக்காக |
| 98. | 2201 | நீர் (காற்றுட்டப்பட்ட, கனிம, தூய்மையாக்கப்பட்ட, வடிக்கப்பட்ட, மருந்தூட்டப்பட்ட, இரும்புடைய, மின்கல, கனிம நீக்கப்பட்ட மற்றும் மூடிய கலனில் விற்கும் நீர் தவிர |
| 99. | 2201 | மது அல்லாத கள், பேரிட்சை மற்றும் பனைநீரா உள்ளடங்கிய நீரா |
| 100. | 2202 90 90 | கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர இளநீர். |
| 101. | 2302, 2304, 2305, 2306, 2308, 2309 | கூனிறால் தீவனம் மற்றும் இறால் தீவனம் உள்ளடங்கிய நீர்வாழ் உயிரி தீவனம், புல், .வைக்கோல், உலர்புல், மாற்றுணவு, பயறுவகை தவிடு, கெட்டியான மற்றும் கூட்டப்பட்ட, கோதுமை தவிடு மற்றும் புண்ணாக்கு உள்ளடக்கிய, வளர்ப்பு பறவைகள் தீவனம் மற்றும் கால்நடைகள் தீவனம். |
| 102. | 2501 | எல்லாவித உப்புக்கள் |
| 103. | 2835 | IS தனிக்குறியீடு எண்.5470: 2002 உறுதப்படுத்தப்பட்ட விலங்கின தீவன தரத்தின்படி டைகால்சியம், ஃபாஸ்பேட் (DCP) |
| 104. | 3002 | மனித இரத்தம் மற்றும் அதன் பகுதிப்பொருட்கள். |
| 105. | 3006 | அனைத்து வகையான கருத்தடை கருவிகள் |

| | | |
|---|---|---|
| 106. | 3101 | அனைத்து சரக்குகள் மற்றும் கரிம சாணம் (கொள்கல அலகில் வைத்து மற்றும் பதிவு முத்திரை பெயர் பொறித்தவைகள் தவிர) |
| 107. | 3304 | காஜல் (காஜல் பென்சில் குச்சிகள் தவிர) குங்குமம், பிண்டி, சிந்தூர், அல்டா. |
| 108. | 3825 | நகர கழிவுகள், கழிவுநீர் சேறு, மருத்துவமனை கழிவுகள் |
| 109. | 3926 | நெகிழி வளையல்கள் |
| 110. | 4014 | ஆணுறைகள் மற்றும் கருத்தடை கருவிகள் |
| 111. | 4401 | விறகு அல்லது எரிபொருள் மரம் |
| 112. | 4402 | வெப்பத்தினால் அல்லது இல்லாமல், மர கரி (ஓட்டுடன் அல்லது நட் கரி உள்ளடங்கிய) |
| 113. | 4802/4907 | நீதித்துறை, நீதித்துறை சாராத முத்திரை தாள்கள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் அல்லது அரசாங்க கருவூலங்கள் மூலம் விற்பனை செய்யும் நீதிமன்ற கட்டண முத்திரைகள். |
| 114. | 4817/4907 | அரசாங்கத்தின் மூலம் விற்கப்படும் கடித உறை, கடித அட்டை முதலியன போன்ற அஞ்சலக இனங்கள். |
| 115. | 48/4907 | பாரத ரிசர்வ் வங்கிக்கு விற்கப்படும் ரூபாய் நோட்டுகள். |
| 116. | 4907 | உதிரியாக அல்லது புத்தக வடிவிலான கோசோலைகள் |
| 117. | 4901 | பிரைலி புத்தகங்கள் உள்ளடங்கிய அச்சு புத்தகங்கள். |
| 118. | 4902 | விளக்கத்துடன் அல்லது இல்லாமல் அல்லது விளம்பர பொருட்கள் உள்ளடங்கி, செய்திதாட்கள், பத்திரிக்கை மற்றும் பருவ இதழ்கள். |
| 119. | 4903 | சிறுவர் படங்கள், வரைதல் அல்லது வண்ணபொருள் புத்தகம். |
| 120. | 4905 | அட்லாஸ்கள், சுவர் நிலப்படம், நில அமைப்பு திட்டங்கள் மற்றும் உலர் உருண்டைகள் உள்ளடங்கிய நில வரைபடங்கள் மற்றும் நீர்வரைப்படம் அல்லது அனைத்து வகையான இதுபோன்ற மாதிரி படங்கள், அச்சிடப்பட்டவைகள். |
| 121. | 5001 | முட்டையிடும் பட்டுப்புழு, கூடு |
| 122. | 5002 | மூல பட்டு |
| 123. | 5003 | பட்டு கழிவு |
| 124. | 5101 | சிக்கலில்லாத அல்லது வாறிய, கம்பளி |
| 125. | 5102 | சிக்கலில்லாத அல்லது வாறிய, சிறந்த அல்லது செப்பமற்ற விலங்கு முடி |
| 126. | 5103 | சிறந்த அல்லது செப்பமற்ற விலங்கு முடியின் அல்லது கம்பளி கழிவு |
| 127. | 52 | காந்தி தொப்பி |
| 128. | 52 | காதி நூல் |
| 129. | 5303 | மூல அல்லது உருவாக்கப்பட்ட ஆனால் நூற்கப்படாத, சணல் இழைகள். |
| 130. | 5305 | தேங்காய், நார் இழை |
| 131. | 63 | இந்திய தேசிய கொடி |
| 132. | 6703 | மனித முடி, சீவிச்செப்பனிட்டு, மெல்லியதாக்கி, வெளுக்கப்பட்டு அல்லது வேறுவித வேலைப்பாடுகளுடன். |
| 133. | 6912 00 40 | மண் மற்றும் களிமண் விளக்குகள் |
| 134. | 7018 | கண்ணாடி வளையல்கள் (அரிதான உலோகங்களில் இருந்து செய்யப்பட்டவைகள் நீங்கலாக) |
| 135. | 8201 | கைகளால் இயக்கப்படும் அல்லது விலங்குகளால் ஒட்டப்படும் வேளாண்மை கருவிகள் அதாவது, மண்வெட்டி, மண்வாரி, மண்கொத்தி, குத்து கோடரி, வாரி போன்ற கை கருவிகள், கோடரி, அரிவாள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | இதே இனங்களை சார்ந்த வெட்டும் கருவிகள், தழை கத்திரிக்கோல் மற்றும் அனைத்து வகை சீராக்கும் தந்திரக்கோல்கள், புல்லரிவாள், கதிரருவாள், வைக்கோல் கத்திகள், புதர்வேலி கத்தரி, மர ஆப்பு மற்றும் மற்ற வேளாண்மை, தோட்டக்கலை அல்லது காடுகளில் பயன்படும் இதே இண கருவிகள். |
| 136. | 8445 | அம்பர் சக்கரம் (Amber Chakra) |
| 137. | 8446 | கைத்தறி (நெசவு இயந்திரம்) |
| 138. | 8802 60 00 | (செயற்கைகோள் உள்ளடங்கி) விண்கலம் மற்றும் உள்கோளவீதி மற்றும் விண்கலம் செலுத்தும் வாகனம். |
| 139. | 8803 | தலைப்பு 8801 ன் சரக்குகளின் பகுதிகள் |
| 140. | 9021 | கேட்கும் சாதனம் |
| 141. | 92 | உள்நாட்டில் கைகளால் செய்யப்பட்ட இசை கருவிகள் |
| 142. | 9603 | சர்க்கந்தாவில் செய்யப்பட்ட முத்தாஸ் (muddhas)மற்றும் ஃபூல் ஃபாஹாரி ஜாது |
| 143. | 9609 | ஸ்லேட் பென்சில் மற்றும் சாக்பீஸ் குச்சிகள் |
| 144. | 9610 00 00 | ஸ்லேட்டுகள் |
| 145. | 9803 | பயனியர் மூட்டைகள் |
| 146. | எந்த அத்தியாயத்திலும் | பூஜை க்கு உள்ளடங்கிய பெயர்கள்<br>(அ) ருத்ராட்சை, ருத்ராட்சை மாலை, துளசி காந்தி மாலை, பஞ்சகவ்யம் (மாட்டு சாணம், வீட்டு நெய், பால், தயிர்–ன் கலவை)<br>(ஆ) புனித நூல் ( யக்னோபாவிட் என பொதுவாக அறியப்படுவது)<br>(இ) மர ஃகடாவ்<br>(ஈ) பஞ்சாமிருதம்<br>(உ) சமய நிலையங்களால் விற்கப்படும் விபூதி<br>(ஊ) தொழிற்குறி இல்லா தேன்<br>(எ) தியா விற்கான விக் (wick for diya)<br>(ஏ) ரோலி (Roli)<br>(ஐ) காலவா (Kalva) (ரக்சா சூத்ரா)<br>(ஒ) சண்டான்டிகா |
| 147. | | வீடுகளுக்கு மற்றும் உள்நாட்டினர் அல்லாத விலக்களிக்கப்பட்ட பிரிவு (NDEC) வாடிக்கையாளர்களுக்கு வழங்களுக்கான திரவ பெட்ரோலிய எரிவாயு |
| 148. | | PDS கீழ் விற்கப்படும் மண்ணெண்ணெய் |
| 149. | | தபால் துறையினால் கொண்டு செல்லப்படும் தபால் மூட்டைகள் |
| 150. | | இயற்கையான அல்லது வளர்க்கப்பட்ட முத்துகள் மற்றும் மதிப்புமிக்க அல்லது பாதி மதிப்புமிக்க கற்கள், அரிதான உலோகங்கள் மற்றும் மதிப்புமிக்க உலோகங்களுடன் கூடிய ஒப்பனை உலோகங்கள். |
| 151. | | அணிகலன்கள், ‘‘பொற்கொல்லர் மற்றும் வெள்ளி கொல்லர்’’, செய்கலம் மற்றும் இதர உருப்படிகள் (அத்தியாயம் 71) |
| 152. | | செலவாணி |
| 153. | | தனிப்பட்ட உபயோகம் மற்றும் வீட்டு உபயோக விளைவு |
| 154. | | பவழம், வேலைப்பாடு செய்யாதது (0508) மற்றும் வேலைப்பாடு செய்த படிவம்(9601) |

(Viii) முதன்மை விதிகளில், விதி **138**க்கு பிறகு, பின்தொடருபவை இடைச்சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

“**138 A. வாகனத்தின் பொறுப்பான நபரால் எடுத்து செல்லப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் சாதனங்கள்.– (1)** வாகனத்திற்கு பொறுப்பான நபரால் எடுத்துச் செல்ல வேண்டியது–

அ) நேர்விற்கேற்ப; விலைப்பட்டியல் அல்லது வழங்கல் சீட்டு அல்லது ஒப்படைப்பு செலுத்து சீட்டு; மற்றும்,

ஆ) ஆணையரால் அறிவிக்கை செய்யப்படும் அத்தகைய முறையில் வாகனத்தின் மீது பதிக்கப்பட்ட ரேடியோ அதிர்வெண் அடையாள சாதனத்திற்கு ஒத்தமைந்த அல்லது நேரடியான மின்னனு வழிப்பட்டியல் எண் அல்லது மின்னனு வழிப்பட்டியலின் நகல்.

